1979 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இன்ஸ்டலேஷன் சார்ஜ் ஒவ்வொரு சர்வீசுக்கும் தகுந்த மாதிரி, அதாவது ஒரு வீட்டுக்கு சர்வீஸ் கொடுக்கும்போது எவ்வளவு கம்பிகள் பயன்படுத்தப்படுகின்றது என்பதைப் பொறுத்து, அவர்கள் இந்த மதிப்பீடு தயார் பண்ணி வாங்குகிறார்கள்.

[முற்பகல் 9-50]

திரு. க. அன்பழகன்: நான் கேட்கிற கேள்வி இது தொடர்பாகச் சொல்லப்பட்ட எல்லாப் பதில்களையும் சரியாகக் கவனித்துக் கேட்பது அல்ல என்றாலும் பொது மக்கள் எடுத்துச் சொன்ன ஒரு உண்மை அடிப்படையில் கேட்க விரும்புகிறேன். திருச்சி மாவட்டத்தில் பெரம்பலூர் வட்டாரத்தில் சிறு நில விவசாயிகளிடமிருந்து மின்சாரக் கட்டணம் 12 பைசா என்பதற்குப் பதிலாக 14 பைசா என்று கணக்கிட்டு வசூலிக்கப்பட்டதாகக் கூறுகிறார்கள். இரண்டு பைசா அதிகமாக வசூலிப்பதால் எங்கள் வேண்டுகோளைப் பரிசிலிக்கவில்லை என்று குறைப்பட்டுக் கொண்டார்கள். அதைப் பற்றி அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சிறுநில விவசாயிகள் அதற்கான சான்றிதழை தாசில்தாரிடத்தில் இருந்து வாங்கித் தருவார்களானால் எவ்வளவு கூடுதலாக வசூலிக்கப்பட்டதோ அதைத் திருப்பி தர அல்லது அடுத்து வரும் பில் தொகையில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

கற்பகம் கூட்டுறவுச் சிறப்பங்காடி, தண்டராம்பட்டு

*வினா எண். 662—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தண்டராம்பட்டு கிராமத்தில் அமைக்கப்பெற்ற கற்பகம் கூட்டுறவு சிறப்பங்காடி தற்போது இயங்கவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அங்கத்தினர்களின் பங்குத் தொகை திருப்பி வழங்கப்பட்டு விட்டதா?

[1979 ஏப்ரல் 7

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :

(அ) ஆம்.

(ஆ) பங்குத் தொகை திருப்பித் தருமாறு கோரி உறுப்பினர்களிடமிருந்து மனு வந்தால், அவர்களுடைய பங்குத் தொகை வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு விநியோகம் மற்றும் விற்பனை சங்கத்தால் திருப்பித் தரப்படும்.

திரு. த. வேணுகோபால் : தற்போது ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலும் ஒரு நியாய விலைக் கடையைத் திறக்கும் நடவடிக்கையை அரசு எடுத்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் தண்டராம்பட்டு தொகுதியை மையமாகக் கொண்டு அந்தக் கிராமத்தில் இயங்கி வந்த கூட்டுறவுச் சிறப்பங்காடி இயங்காத நிலை ஏற்பட்டதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தண்டராம்பட்டில் கூட்டுறவு சிறப்பங்காடி ஒன்று இயங்கி வந்தது. அது தற்போது கூட்டுறவு விவசாயிகள் சேவா சங்கமாக மாறியதன் காரணமாக கற்பகம் கூட்டுறவுச் சிறப்பங்காடி கிளையின் பணியை புதிதாக இன்றைய தினம் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கூட்டுறவு விவசாய சேவா சங்கம் ஆற்றிக் கொண்டிருக்கும் காரணத்தால் அந்தக் கிளை இன்றைய தினம் மூடப்பட்டிருக்கிறது.

திரு. த. வேணுகோபால் : அந்தச் சங்கத்தில் பங்குத் தொகை போட்டவர்கள் அதைத் திருப்பி கொடுக்கவேண்டுமென்று கோரி எவ்வளவு நாட்கள் ஆகிறது ? ஏன் திருப்பித் தரப்படவில்லை ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அந்தச் சங்கத்திலே ஏறத்தாழ 144 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். 1,540 ரூபாய் பங்குத் தொகையாக இருக்கிறது. இதுவரை எந்த உறுப்பினரும் அதைத் திருப்பித் தரவேண்டுமென்று கொடுக்கவில்லை. அவர்கள் மனுப் போட்டால் அந்தப் பணம் உடனடியாகத் திருப்பிக் கொடுக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தண்டராம்பட்டில் மினி சூபர் மார்க்கட் செய்த பணியை விவசாய சேவா சங்கம் செய்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். மினி சூப்பர் மார்க்கட் தொகுதி பூராவும் பயனடையும் வகையிலும் பக்கத்திலுள்ள தொகுதி பயனடையக் கூடிய வகையிலும் நடத்தக் கூடிய சூழ்நிலை இருந்தது. ஆகவே, அந்த மினி சூப்பர் மார்க்கட் இயங்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

1979 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தண்டராம்பட்டு பஞ்சாயத்தைப் பொறுத்தவரை இந்தக் கூட்டுறவு விவசாய சேவா சங்கம் மட்டுமல்ல, அந்த பஞ்சாயத்துக்கு உட்பட்ட பிற ரெவின்யூ கிராமங்களில் கிராமத்திற்கு ஒரு கடை என்ற வகையில் வேறு கடைகளும் இந்தப் பணியை ஆற்றிக் கொண்டு வருகிற காரணத்தால் கற்பகம் கூட்டுறவு அங்காடி கிளை தேவை யில்லை என்று கருதி மூடப்பட்டிருக்கிறது.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தண்டராம்பட்டு கிராமத்தில் மூடப்பட்ட கூட்டுறவு சிறப்பங்காடியில் ஷேர் திருப்பித் தரப் படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாகூர் தொகுதியில் மத்தூர் கிராமத்தில் ஷேர் கலெக்‌ஷன் செய்யப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் அப்படி சிறப்பங்காடி ஏற்படுத்தப்பட வில்லை. பல தடவை மனுக்கள் போடப்பட்டும் ஷேர் இது வரை திருப்பித் தரப்படவில்லை. இதைப் பற்றி அரசுக்குத் தெரியுமா ? அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : என்னிடத்தில் விவரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அளித்த விவரத்தை அடிப்படையாகக் கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப் படும்.

கூட்டுறவு நிறுவன ஊழியர்களுக்கு குடும்ப நல நிதித் திட்டம்.

*வினா எண் 663—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் குடும்ப நல நிதித் திட்டத்தினை கூட்டுறவு நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர் களுக்கும் விரிவு படுத்தும் திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : துணைத் தலைவர் அவர் களே, குடும்ப நலத் திட்டத்தின் மூலமாக மற்ற அரசு அலுவலர்கள் எல்லாம் பயன் பெறுகிறார்கள். இந்த அர சாங்கத்தினுடைய கூட்டுறவுத் துறையிலே பல்வேறு துறை களிலே நிலவள வங்கிகளிலே, கூட்டுறவு மாவட்ட அளவிலே